**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.292/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.நாகராஜ், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமளா | கணவர் பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 11.02.2026

**P.W. : 1**

**<u>4 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் தந்தை பெயர் கல்யாணசுந்தரம். எனது தாத்தா பெயர் தங்கசாமி. என் தாத்தாவின் அப்பா பெயர் பொன்னுசாமி. அவரது அப்பா பெயர் நீலமேகம். என்னிடம் காட்டப்படும் எனது குடும்ப வம்சாவழி பட்டியலில் உள்ள விபரம் சரியானதுதான். அந்த வம்சாவழி பட்டியல் **பிவாசாஆ.1** ஆகும். இந்த வழக்கின் 4 வது பிரதிவாதி நீலமேகசாமி என்றும் 5 முதல் 17

பிரதிவாதிகள் மேற்படி கோவிலின் டிரஸ்டிகள் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 4 முதல் 17 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்கிறார்கள் என்று தெரியாது. 4 முதல் 17 பிரதிவாதிகள், எனது சகோதரர்களான 1, 2 பிரதிவாதிகள் மீது தாவா 1 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து அவர்கள் விற்கவோ, வில்லங்கம் செய்யவோ கூடாது என உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி ஸ்ரீரங்கம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. தாவா 1 அயிட்ட சொத்து 4 ஆம் பிரதிவாதி கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்து எனது அப்பா மற்றும் மூதாதையர் சொத்து என்பதைக் காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை. தாவா 1 வது அயிட்ட சொத்தை 22.08.1917 ஆம் ஆண்டு டிசி.சீனிவாசன் பிள்ளை அவர்களால் அங்கமுத்து என்கிற அங்கப்ப செட்டியார் என்பவரிடமிருந்து 80 செண்ட்டை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. டிசி.சீனிவாசன் பிள்ளை மேற்படி கிரையம் வாங்கிய 80 செண்ட்டை அவரது குமாரர்களான லெட்சுமணன்பிள்ளை, கிருஷ்ணசாமிபிள்ளை ஆகியோர் 4 ஆம் பிரதிவாதி கோவிலின் மேலாளரான நீலமேகம்பிள்ளைக்கு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் அந்த விபரம் தெரியும். தாவா 1 வது அயிட்ட சொத்தைப் பொறுத்து 27.02.1918 அன்று மாணிக்கம்பிள்ளை, தங்கசாமிபிள்ளை, பசுபதியாபிள்ளை, டிசி.சீனிவாசன்பிள்ளை, ரெத்தினசாமிபிள்ளை, அப்பாவு பிள்ளை ஆகியோர் செய்து கொண்ட ஒரு டிரஸ்ட் ஆவணத்தின்படி தாவா சொத்து 4 ஆம்

பிரதிவாதி நீலமேகபிள்ளை சாமிக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி டிரஸ்ட் ஆவணத்தில் தாவா 1 வது அயிட்ட சொத்து கிரையம் செய்ய அதில் கண்ட நபர்களுக்கு பாத்தியமில்லை என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி டிரஸ்ட்டிகளில் ஒருவரான சீனிவாசன் பிள்ளை ஒரு சின்னத்தம்பி என்பவருக்கு 01.09.1926 தேதியில் தாவா 1 வது அயிட்ட சொத்தை ஒரு பதிவு செய்த குத்தகை பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை குத்தகைக்கு விட்டுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.